www.Padasalai.Net www.Padasalai.Org

FRS

# முதல் திருப்புதல் தேர்வு – 2021

## தமிழ் SALEM

9 - ஆம் வகுப்பு

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - 1 பிரிவு - அ 5 X 1 = 5

I சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தமிழ்விடு தூது ...................... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. "காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!" ........ இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்.
   அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
   இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி
3. **மல்லல்** மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
4. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச் சொற்கள் ஆ) வடசொற்கள்
   இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
5. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள் - எருதுகட்டி
   ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு
   ஈ) பட்டிமன்றம் - பட்டி மண்டபம்

பிரிவு - ஆ 4 X 1 = 4

பொருத்தமான பெயரடைகளை எழுதுக.
*(நல்ல, பெரிய, இனிய, கொடிய)*

6. எல்லோருக்கும் .......................... வணக்கம்.
7. அவன் ...................... நண்பனாக இருக்கிறான்.
8. .......................... ஓவியமாக வரைந்து வா.
9. .......................... விலங்கிடம் பழகாதே.

G. THIRUMOORTHI, M.Sc.,B.Ed., P.G. Asst. in PHYSICS, Akash Vidya Bhavan Mat. Hr. Sec. School, Vaadhankattanur - 637303, Sankagiri (Tk), Salem (Dt)

பிரிவு - இ 4 X 1 = 4

பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க.
(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

10. ஊர்தி ...................... சென்றது.
11. காலம் ............................. ஓடுகிறது.
12. சங்க இலக்கியம் வாழ்க்கையை ............................. காட்டுகிறது.
13. இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் .............. காட்டு.

பிரிவு - ஈ 2 X 1 = 2

தமிழ் எண்களில் எழுதுக.

14. நாற்பத்து மூன்று.
15. தொண்ணூறு.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Padasalai.Org

## பகுதி - 2

**II எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5 X 2 = 10

16. நீங்கள் பேசும்மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
18. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
19. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
20. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
21. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
22. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

## பகுதி - 3

**III எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 3 X 3 = 9

23. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
24. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?
25. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
26. ஏறுதழுவுதல், திணை நிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?
27. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

## பகுதி - 4

**IV அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

28. "தித்திக்கும் தெள் அமுதாய்த் " ......... எனத்தொடங்கும் தமிழ்விடு தூது பாடலை அடிமாறாமல் எழுதுக.
29. "மிகுதியான்" - எனத்தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.

## பகுதி - 5

**V ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்க.** 1 X 6 = 6

30. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்குக.
31. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
32. உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

## பகுதி - 6

**VI அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 4 X 1 = 4

33. மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.
*(பிழை நீக்கி எழுதுக.)*
34. கற்றோர்க்குச் சென்ற............................... .
*(தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.)*
35. **கலைச்சொல்லாக்கம் தருக.** Comparative Grammar.
36. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன.
- இது எவ்வகைத் தொடர்.

அ) வினைத்தொடர் ஆ) கட்டளைத்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித் தொடர்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com